DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 94/2013 | | Crime No.: | Station : |
| PW : 1 | LW : 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | லிங்கராஜ் | Caste | |
| Father's Name | பழனிச்சாமி | Calling | விவசாயம் |
| Village | புளியங்கோம்பை | Religion | |
| Taluk | சத்தியமங்கலம் | Age | 48 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 15.10.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது புளியங்கோம்பை - சத்தியமங்கலத்தில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன பழனிச்சாமி எனது அப்பா. 2013-ம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை, மாலை 04.00 மணிக்கு என் அப்பாவுக்கு சொந்தமான SUPER XL TN 36 X 7812 என்ற வண்டியில் எங்கள் வீட்டிலிருந்து மாரனூர் போவதற்காக சத்தி - மேட்டுப்பாளையம் ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது S.R.T School-க்கு முன்பாக கிழக்கு - மேற்கு நோக்கி ரோட்டின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தபோது, என் அப்பாவின் வண்டிக்கு பின்னால் வேகமாக வந்த HERO HONDA SPLENDER வாகனம் வந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது.

2. மேற்படி HERO HONDA SPLENDER வாகனத்தில் 2 நபர்கள் வந்தார்கள். மேற்படி வாகனத்தை ஓட்டிவந்தவர் பெயர் நாகராஜ். பின்னால் அமர்ந்து வந்தவர் பெயர் காளியப்பன், காளியப்பனுக்கு அடிபட்டிருந்ததாக எனது அப்பாவின் செல்போனிலிருந்து எனது அக்காவின் மகன் பிரவிற்கு தகவல் சொல்லி பிரபு என் வீட்டிற்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு சத்தி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு என் அப்பாவின் தலையின் பின்பகுதியில் அடிபட்டு அவர் உடல்நிலை மோசமாக இருந்தது.

3. பின் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல அறிவுறுத்தப்பட்டது. நாங்கள் கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக என் அப்பாவை சேர்த்தோம். பின்பு சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் அது சம்மந்தமாக எழுத்துமூலமான புகார் அளித்தேன். அங்கு 3 நாட்கள் சிகிச்சையிலிருந்து சிகிச்சை பலனின்றி கங்கா மருத்துவமனையில் என் அப்பா இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்தை ஏற்பட்டபோது மேற்படி Splender வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் அக்கா மகன் பிரபு விபத்து குறித்து தகவல் சொல்லித்தான் எனக்கு விபத்து பற்றித் தெரிய வந்தது என்றால் சரிதான். என்னை விபத்து நடந்த இடத்திற்கு எனது அக்கா மகன் பிரபு அழைத்துச் சென்றாரா என்றால் இல்லை சத்தி அரசு மருத்துவமனைக்குதான் சென்றோம், விபத்து நடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை. விபத்து எப்படி நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் நேரடியாகத் தெரியாது, தகவல் சொல்லும் வரை விபத்து ஏற்பட்ட விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

2. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கோவை கங்கா மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு என்றால் மதியம். என்னை எந்த போலீசார் விசாரித்தார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எங்கு வைத்து புகார் கொடுத்தேன் என்றால் சத்தி காவல் நிலையத்தில். புகாரை நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் ஆமாம். புகார் கொடுக்கும்போது எனது அக்கா மகன் என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. அவர் மருத்துவமனையில் இருந்தார். எனது அக்கா மகன் பிரபுவை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

3. நான் புகாரில் சொன்னதுபோல் எதிரியின் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவோ, அதிவேகமாகவோ, இரு சக்கர வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்காததால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து சிறந்த ஓட்டுநர் விருது

பெற்றுள்ளார். எதிரிக்கும், விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், எனது அப்பாவின் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை
இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.